Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkural@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

R S Polyclinic

# ஆவின் பால் பொருட்களின் விலை உயர்வு அமல்: பொதுமக்கள் அதிர்ச்சி!



சென்னை 28, அக்டோபர் 2026: ஆவின் பால் பொருட் களின் விலை உயர்வு நாளை முதல் அமலுக்கு வருகிறது. ஆவின் பால் பொருட் களான தயிர், வெண்ணெய், நெய் உள்ளிட்ட 67 ஆவின் பால் பொருள்களின் விலை அதிரடியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஆவின் நிறுவனம் 175க்கும் மேற்பட்ட வகையான பால் மற்றும் பால் பொருள் களைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

ஆவின் பாலகங்கள், சில்லறை விற்பனை நி லையங்கள் மூலம் இவை விற்பனை செய் யப்படுகின்றன. சிறப்பு இனிப்புகள் தயாரிக்கப் பட்டு, நிறுவனங்கள் மற்றும் வாடிக் கை யாளர்களுக்கு தேவைக் கேற்ப விநியோகிக்கப் படுகின்றன. தயிர், லஸ்ஸி, பனீர் உள்ளிட்ட முக்கியப் பொருள்களின் விற் பனை கடந்த ஆண்டு டன் ஒப்பிடுகையில் 15 முதல் 20 சதவீதம் வரை அதிகரித் துள்ளது.

இந்த நிலையில், மூலப்பொருள்களின் விலை உயர்வு, கொள் முதல் செலவுகள் மற்றும் இதர செலவுகள் அதிகரித்துள்ளதால், ஆவின் பால் பொருள் களின் விலை உயர்த்தப் பட்டுள்ளதாக ஆவின் நிர்வாகம் தெரிவித் துள்ளது. தீபாவளி நெருங்கும் நிலையில், ஆவின் நெய், வெண் ணெய், இனிப்புப் பொருள்களின் விலை உயர்த்தப்பட்டுள்ளது, பொதுமக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது. இதையடுத்து 500 மி.லி. ஆவின் நெய் ரூ. 365-ல் இருந்து ரூ.400 ஆகவும் 500 மி.லி. தயிர் ரூ.35-ல் இருந்து ரூ.40 ஆகவும் 250 கிராம் ஆவின் மைசூர்பா ரூ.140-ல் இருந்து ரூ.160 ஆகவும் விலை உயர்த் தப்பட் டுள்ளது. இருப் பினும், பொதுமக்களின் அத்தி யாவசிய தேவையாக விளங்கும் ஆவின் பாலின் விலையில் எந்த மாற்றமும் செய்யப்பட வி ல்லை என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

---

Rtn Dr R Sathyanarayanan, Editor | 8148231942 | hellomadras.com

---